## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

*17th ஆகஸ்ட் / August 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. கோஹிலா**
Call to Worship — Mrs. Kohila

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. கோஹிலா**
Prayer — Mrs. Kohila

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### அருள் நிறைந்தவர்

*1. அருள் நிறைந்தவர்,*
*பூரண நட்சகர்*
*தேவரீரே,*
*ஜெபத்தைக் கேட்கவும்*
*பாவத்தை நீக்கவும்*
*பரத்தில் சேர்க்கவும்*
*வல்லவரே.*

*2. சோரும் என் நெஞ்சுக்கு*
*பேரருள் பொழிந்து*
*பெலன் கொடும்.*
*ஆ! எனக்காகவே*
*மரித்தீர், இயேசுவே;*
*என் அன்பின் ஸ்வாலையே*
*ஓங்கச் செய்யும்.*

*3. பூமியில் துக்கமும்*
*சஞ்சலம் கஸ்தியும்*
*வருகினும்,*
*இரவில் ஒளியும்*
*சலிப்பில் களிப்பும்*
*துன்பத்தில் இன்பமும்*
*அளித்திடும்.*

*4. மரிக்கும் காலத்தில்*
*கலக்கம் நேரிடில்*
*சகாயரே,*
*என்னைக் கைதூக்கவும்*
*ஆறுதல் செய்யவும்*
*மோட்சத்தில் சேர்க்கவும்*
*வருவீரே .*

✝ **மாறி வாசித்தல் 33ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
"சங்கீதம் 102" — Congregation

"கர்த்தாவே என் விண்ணப்பத்தைக் கேளும்"

**Psalter Reading "Psalm 102"**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

### காக்கும் கரங்கள் உண்டெனக்கு

*1. காக்கும் கரங்கள் உண்டெனக்கு*
*காத்திடுவார் கிருபையாலே*
*அல்லேலூயா பாடிப் பாடி*
*அலைகளை நான் தாண்டிடுவேன்*

**நம்புவேன் இயேசுவை (4)**

*2. நித்தனைகள் போராட்டம் வந்தும்*
*நீதியின் தேவன் தாங்கினாரே*
*நேசக் கொடி என் மேல் பறக்க*
*நேசருக்காய் ஜீவித்திடுவேன்*

*3. கன்மலைகளை பெயர்க்கும்படியாய்க்*
*கர்த்தர் என்னைக் கரம் பிடித்தார்.*
*காத்திருந்து பெலனடைந்து*
*கழுகு போல எழும்பிடுவேன்*

*4. அத்தி மரம் துளிர் விடாமல்*
*ஆட்டு மந்தை முதலற்றாலும்*
*கர்த்தருக்குக் காத்திருப்போர்*
*வெட்கப்பட்டுப் போவதில்லை*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திரு. நெல்சன் சாம் ஜெரிஷ்**
Scripture Reading — Mr. Nelson Sam Jerish
***I தெசலோனிக்கேயர் 4 : 13 – 18***

1 Thessalonians 4 : 13 – 18

**அருளுரை**
Sermon

**போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Pastor. Jesudoss Charles

✝ **அர்ப்பணகீதம்**
Offertory & Closing Song

**சபையார் இணைந்து**
Congregation

**திருப்பாதம் நம்பி வந்தேன்**

**திருப்பாதம் நம்பி வந்தேன்**
**கிருபை நிறை இயேசுவே**
**தம தன்பை கண்டடைந்தேன்**
**தேவ சமூகத்திலே**

*1.இளைப்பாறுதல் தரும் தேவா*
*களைத்தோரைத் தேற்றிடுமே*
*சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்*
*சுகமாய் அங்கு தங்கிடுவேன்*

*2. என்னை நோக்கி கூப்பிடும் வேளை*
*இன்னல் துன்ப நேரத்திலும்*
*கருத்தாய் விசாரித்து என்றும்*
*கனிவோடென்னை நோக்கிடுமே*

*3. என்னை கைவிடாதிரும் நாதா*
*என்ன நிந்தை நேரிடினும்*
*உமக்காக யாவும் சகிப்பேன்*
*உமது பெலன் ஈந்திடுமே*

*4. மனம் மாற மாந்தன் நீரல்ல*
*மன வேண்டுதல் கேட்டிடும்*
*எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே*
*ஏசுவே உம்மை அண்டிடுவேன்*

*5. உம்மை ஊக்கமாய்*
*நோக்கிப்பார்த்தே*
*உண்மையாய் வெட்கம்*
*அடையேன்*
*தமது முகப் பிரகாசம்*
*தினமும் என்னில் வீசிடுதே*

*6. சத்துரு தலை கவிழ்ந்தோட*
*நித்தமும் கிரியை செய்திடும்*
*என்னைத் தேற்றிடும்*
*அடையாளம்*
*ஏசுவே இன்று காட்டிடுமே*

*7. விசுவாசத்தால் பிழைத்தோங்க*
*வீர பாதை காட்டினீரே*
*வளர்ந்து கனிதரும் வாழ்வை*
*விரும்பி வரம் வேண்டுகிறேன்*

*8. பலர் தள்ளின மூலைக்கல்லே*
*பரம சீயோன் மீதிலே*
*பிரகாசிக்கும் அதை நோக்கி*
*பதறாமலே காத்திருப்பேன்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **மனப்பாட வசனம்**
Memory Verse

**சபையார் இணைந்து**
Congregation

**பிலிப்பியர்** 4 : 8
Philippians 4 : 8

***8. கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

**மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **/ Indicates Congregation standing**